# முக்கிய குறிப்புகள்

***ஒளி*** *என்பது ஒரு வகை ஆற்றல், அலைவடிவில் பரவுகிறது.*

❋ **ஒளிக்கதிர்** - ஒளி செல்லும் பாதை ❋ **ஒளிக்கற்றை** - ஒளிக்கதிர்களின் தொகுப்பு

## ஒளிவிலகல்

*ஒளிக்கதிரொன்று ஓர் ஒளிபுகும் ஊடகத்தில் இருந்து மற்றோர் ஒளிபுகும் ஊடகத்திற்குச் சாய்வாகச் செல்லும்போது, ஒளிக்கதிர் தன் பாதையில் இருந்து விலகிச் செல்வதால் ஒளிக்கதிரின் பாதையில் ஏற்படும் விலகல், ஒளிவிலகல் எனப்படும்.*

❋ **ஒளிவிலகலின் முதல் விதி :** படுகதிர், விலகுகதிர், படுபுள்ளியில் விலகல் அடையும் பரப்புக்குச் செங்குத்தாக வரையப்படும் கோடு ஆகியவை ஒரே தளத்தில் அமைகின்றன.

❋ **ஒளிவிலகலின் இரண்டாம் விதி (அ) ஸ்நெல் விதி :** படுகோணத்தின் சைன் மதிப்பிற்கும், விலகு கோணத்தின் சைன் மதிப்பிற்கும் இடையே உள்ள தகவானது அவ்விரு ஊடகங்களின் ஒளிவிலகல் எண்களின் தகவிற்கு சமம்.

## ஒளிச்சிதறல்

ஒளிக்கற்றையானது ஊடகத்தில் உள்ள துகள்களுடன் இடைவினையில் ஈடுபடும் போது, அவை அனைத்துத் திசைகளிலும், திருப்பி விடப்பட்டுச் சிதறல் நிகழ்கிறது. **ஒளிச்சிதறலின் வகைகள் :**

**i) மீட்சிச் சிதறல் :** சிதறல் அடையும் ஒளிக்கற்றையின் தொடக்க மற்றும் இறுதி ஆற்றல்கள் சமமாக இருக்கும்.

**ii) மீட்சியற்ற சிதறல் :** சிதறல் அடையும் ஒளிக்கற்றையின் தொடக்க மற்றும் இறுதி ஆற்றல்கள் சமமாக இருக்காது.

| | |
|---|---|
| **லென்சுகள்** | இரு கோளகப் பரப்புகள்(குவிலென்சு, குழிலென்சு) அல்லது ஒரு கோளகப் பரப்பு மற்றும் ஒரு சமதளப் பரப்பு (தட்டக்குவி லென்சு, தட்டக்குழி லென்சு) ஆகியவற்றிற்கு இடைப்பட்ட ஒளிபுகும் தன்மை கொண்ட ஊடகம் ஆகும். |
| **லென்சின் திறன்** | லென்சு ஒன்று தன்மீது விழும் ஒளிக்கதிர்களைக் குவிக்கும் அல்லது விரிக்கும் அளவு லென்சின் திறன் எனப்படும். P=1/f. **SI அலகு**–டையாப்டர்(D). |
| **நுண்ணோக்கி** | மிகநுண்ணிய பொருள்களைக் காண உதவும் ஒளியியல் கருவியாகும்.<br>**வகைகள் :** 1) எளிய நுண்ணோக்கி 2) கூட்டு நுண்ணோக்கி |
| **நகரும் நுண்ணோக்கி** | இது 0.01மி.மீ என்ற அளவிலான மிகச்சிறியத் தொலைவுகளை மிகத்துல்லியமாக அளந்தறியக்கூடிய மிகச்சிறந்த கருவிகளில் ஒன்றாகும். |
| **தொலைநோக்கி** | தொலைவில் உள்ள பொருள்களைக் காண உதவும் ஒளியியல் கருவி.<br>❋ **ஒளியியல் பண்புகளின் அடிப்படையில் :** ஒளிவிலகல் மற்றும் ஒளி எதிரொளிப்பு தொலைநோக்கி<br>❋ **காணக்கூடிய பொருள்களின் அடிப்படையில் :** வானியல் & நிலப்பரப்பு தொலைநோக்கிகள். |

## மனித கண்

**பகுதிகள் :** கார்னியா, ஐரிஸ், கண்பாவை, விழித்திரை, விழிலென்சு, சிலியரித் தசைகள்

| | |
|---|---|
| **விழி ஏற்பமைவுத் திறன்** | அருகில் மற்றும் தொலைவில் உள்ள பொருள்களைத் தெளிவாகக் காண்பதற்கு ஏற்ப விழி லென்சு தன்னை மாற்றி அமைத்துக் கொள்ளும் தன்மை, விழி ஏற்பமைவுத்திறன் ஆகும். |
| **பார்வை நீட்டிப்பு** | இரு அடுத்தடுத்த ஒளித்துடிப்புகளுக்கு இடைப்பட்ட காலஇடைவெளி $\frac{1}{16}$ வினாடியை விடக்குறைவாக இருந்தால், மனிதக் கண்களால் அவற்றைத் தனித்தனியாக வேறுபடுத்தி அறிய இயலாது. |
| **சேய்மைப் புள்ளி** | கண்ணினால் பொருள்களை தெளிவாகக் காண முடிகிற அதிகபட்ச தொலைவு சேய்மைப்புள்ளி ஆகும். |
| **அண்மைப் புள்ளி/ தெளிவுறு காட்சியின் மீச்சிறுத் தொலைவு** | மனிதக் கண் ஒன்றினால் தன் எதிரில் உள்ளப் பொருள்களைத் தெளிவாகக் காணக்கூடிய மிகச்சிறியத் தொலைவு ஆகும். |

## கண்ணின் குறைபாடுகள்

| | |
|---|---|
| ❋ **மையோபியா** | கிட்டப்பார்வை, தொலைவில் உள்ள பொருள்களை காணமுடியாது. |
| ❋ **ஹைப்பர் மெட்ரோஃபியா** | தூரப்பார்வை, அருகில் உள்ள பொருள்களை காணமுடியாது. |
| ❋ **விழி ஏற்பமைவுத் திறன் குறைபாடு** (presbyopia) | வயதுமுதிர்வு காரணமாக, சிலியரித் தசைகள் வலுவிழந்து விழிலென்சு தன் நெகிழ்வுத் தன்மையை இழப்பதால் ஏற்படும். |
| ❋ **பார்வைச் சிதறல் குறைபாடு** (Astigmatism) | இணையான மற்றும் கிடைமட்டக் கோடுகளைத் தெளிவாகக் காண இயலாது. |

★ ஒளியின் திசைவேகம், $c = \nu \lambda$

★ ஸ்நெல் விதி, $\frac{\sin i}{\sin r} = \frac{\mu_2}{\mu_1}$

★ ராலே சிதறல் விதி, $S \, \alpha \, \frac{1}{\lambda^4}$

★ லென்சு சமன்பாடு, $\frac{1}{f} = \frac{1}{v} - \frac{1}{u}$

★ லென்சின் திறன், $P = \frac{1}{f}$

★ லென்சின் உருப்பெருக்கம் $= \frac{v}{u} = \frac{h'}{h}$

★ லென்சை உருவாக்குவோர் சமன்பாடு, $\frac{1}{f} = (\mu - 1)\left(\frac{1}{R_1} - \frac{1}{R_2}\right)$

★ மையோபியாக்கு தேவைப்படும் குழிலென்சு, $f = \frac{xy}{x-y}$

★ ஹைப்பர் மெட்ரோபியாக்கு தேவைப்படும் குவிலென்சு, $f = \frac{dD}{d-D}$

★ 1 டையாப்டர் = 1 $மீ^{-1}$

## குவிலென்சு மற்றும் குழிலென்சில் நடைபெறும் ஒளிவிலகலால் பிம்பங்கள் தோன்றுதல்

| | | குவி லென்சு | குழி லென்சு |
|---|---|---|---|
| விதி - 1 | ஒளிக்கதிரானது, ஒரு குவிலென்சு அல்லது குழிலென்சின் ஒளியியல் மையத்தின் வழியாகச் செல்லும்போது விலகலடையாமல் அதே பாதையில் செல்கிறது. |  |  |
| விதி - 2 | முதன்மை அச்சுக்கு இணையாக வரும் ஒளிக்கதிர்கள், குவிலென்சின் மீது படும்போது முதன்மைக் குவியத்தில் குவிக்கப்படும். குழிலென்சின் மீது படும்போது முதன்மைக் குவியத்திலிருந்து விலகலடைந்து செல்வது போல் தோன்றும். |  |  |
| விதி - 3 | முதன்மைக்குவியம் வழியாகச் சென்று குவிலென்சின் மீது விழும் ஒளிக்கதிர்களும், முதன்மைக் குவியத்தை நோக்கிச் சென்று குழிலென்சின் மீது விழும் ஒளிக்கதிர்களும் விலகலடைந்த பிறகு முதன்மை அச்சுக்கு இணையாகச் செல்லும். |  |  |

## குவிலென்சின் வழியாக ஒளிவிலகல்

| | |
|---|---|
| பொருளின் நிலை : ஈறிலாத் தொலைவு<br>பிம்பத்தின் நிலை : குவியத்தில் (F) | அளவு : பிம்பம் < பொருள்<br>மெய்ப்பிம்பம் |




| | |
|---|---|
| பொருளின் நிலை: F & 2F-க்கு இடையே<br>பிம்பத்தின் நிலை : 2F(C)–க்கு அப்பால் | அளவு : பிம்பம் > பொருள்<br>தலைகீழான மெய்பிம்பம் |




| | |
|---|---|
| பொருளின் நிலை : 2F(C)–க்கு அப்பால்<br>பிம்பத்தின் நிலை :F & 2F-க்கு இடையே | அளவு : பிம்பம் < பொருள்<br>தலைகீழான மெய்ப்பிம்பம் |




| | |
|---|---|
| பொருளின் நிலை : குவியத்தில் (F)<br>பிம்பத்தின் நிலை : ஈறிலாத் தொலைவு | அளவு : பிம்பம் > பொருள்<br>தலைகீழான மெய்ப்பிம்பம் |




| | |
|---|---|
| பொருளின் நிலை : 2F<br>பிம்பத்தின் நிலை : 2F | அளவு : பிம்பம் = பொருள்<br>தலைகீழான மெய்ப்பிம்பம் |




| | |
|---|---|
| பொருளின் நிலை : F & O-க்கு இடையே<br>பிம்பத்தின் நிலை: F & 2F-க்கு இடையே | அளவு : பிம்பம் > பொருள்<br>நேரான மாய பிம்பம் |




## குழிலென்சின் வழியாக ஒளிவிலகல்

| | |
|---|---|
| பொருளின் நிலை : ஈறிலாத் தொலைவு<br>பிம்பத்தின் நிலை : குவியத்தில் (F) | அளவு : பிம்பம் < பொருள்<br>மாயபிம்பம் |




| |
|---|
| பொருளின் நிலை : அளவிடக்கூடிய தொலைவில் வைக்கப்படும்போது<br>பிம்பத்தின் நிலை : F & O-க்கு இடையே |
| அளவு : பிம்பம் < பொருள், நேரான மாயபிம்பம் |




**லென்சிற்கும் பொருளுக்கும் இடையே தூரம் குறையும்போது, பிம்பத்திற்கும் லென்சிற்கும் இடையே உள்ள தொலைவும் குறைகிறது.**

<u>**குறிப்பு:**</u> **AB** என்பது பொருள் மற்றும் **A’B’** என்பது பிம்பம்